# தொழில் வழங்குநரின் வருடாந்த கூற்று
# (முற்பண தனியாள் வருமான வரி - APIT)

## 2023/2024 ஆம் வரி மதிப்பீட்டாண்டு

**2024, ஏப்ரல் 30 அன்று அல்லது அதற்கு முன்னர்**

**வருடாந்த கூற்று மற்றும் அட்டவணைகளை கோப்பிடுவதற்கான**

## இ- சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

**இலத்திரனியல் முறைமூலம் சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும்**

- வரிசெலுத்துநர், இ-கோப்பிடுவதற்கு தனிப்பட்ட அடையாள இலக்கத்தை *(PIN)* கொண்டிருத்தல் வேண்டும். வரிசெலுத்துநரிடம் *PIN* இல்லை எனில், *PIN* இனைப்பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர்.
  - இ – சேவையினூடாக அல்லது
    www.ird.gov.lk → இ-சேவைக்கான அணுகல் → PIN இற்கான கோரிக்கை
  - உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் தலைமை காரியாலயத்திலுள்ள முதன்மை பதிவு அலகில் (2ம் மாடி ) அல்லது ஏதேனும் நகர/பிராந்திய அலுவலகம்
- வருடாந்த கூற்றினை கோப்பிடுவதற்கு முன்னர் கீழ்வரும் வழிகாட்டிகளைப் பார்க்கவும்.
  - *வருடாந்த கூற்று மற்றும் அட்டவணைகளை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்*
  - APIT வருடாந்த கூற்றினை இ - சேவையினூடாக சமர்ப்பித்தலுக்கான வழிகாட்டி
  - APIT அட்டவணைகளை தயாரித்தலுக்கான வழிகாட்டி

  www.ird.gov.lk → பதிவிறக்கம் → படிவங்கள் & விபரத்திரட்டுகள் → விபரத்திரட்டுகள் → PAYE/APIT
- *APIT* வருடாந்தக் கூற்றினை சமர்ப்பிக்காத அல்லது பிழையான *APIT* வருடாந்தக் கூற்றினை சமர்ப்பித்த எந்தவொரு தொழில்தருநர்கள் மீதும் தண்டம் விதிக்கப்படும் .

**2024, மார்ச் மாதத்திற்கான வரி கொடுப்பனவுகளை 2024, ஏப்ரல் 15 அன்று அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளவும்.**

| வரி வகை | வரி வகை குறியீடு | காலப்பகுதி குறியீடு | கொடுப்பனவு வகை |
|---|---|---|---|
| முற்பண தனியாள் வருமான வரி - APIT | 03 | 24030 | S |

**கொடுப்பனவு நறுக்குகள் கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டாம்**

- செலுத்த வேண்டிய வரிகளை இணையவழி வரிக் கொடுப்பனவு தளத்தினூடாக *(OTPP)* செலுத்தவும்.
  மேலதிக விபரங்களுக்கு www.ird.gov.lk சென்று ‘Tax Payments – Online Tax Payment Platform (OTPP)’ இனை பார்க்கவும்.
- *APIT* க்கான கொடுப்பனவுகள் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் செலுத்தலாம்.
  உங்கள் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தை *(TIN)* காசோலையின் பின்பக்கத்தில் எழுதவும். மேலும் கொடுப்பனவு நறுக்குகளின் பின்பகுதியில் மேலதிக தகவல்கள் காணப்படுகின்றன.
- DIN இனை https://eservices.ird.gov.lk/Payment/PayingInSlip/Index இனூடாக பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

*வரியை செலுத்தாது விடுதல் அல்லது தாமதமாக செலுத்துதல் மீதான தண்டம் மற்றும் வட்டி தள்ளுபடி செய்யவோ அல்லது குறைக்கப்படவோ மாட்டாது என்பதை அறிந்துகொள்ளவும்.*

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**